**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.**

**அசல் வழக்கு எண்.02/2019**

பெயர் : பரமகுரு DW-4.

த/பெ. : நாராயணசாமி

தேதி : 23.09.2024

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

முதல் விசாரணை தொடர்ச்சி:-

07.10.2002ல் பிரதிவாதிகளின் குடும்பத்தில் ஒரு பாகசுரவோலை எழுதப்பட்டது. அந்த பாகசுரவோலை பத்திரத்தில் நான் 3ம் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன். நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் பாகசுரவோலையில் உள்ள 3வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அந்த சாட்சி கையொப்பம் மட்டும் **பி.வா.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**:-

எனக்கு சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. என்னை 2ம் பிரதிவாதி நடராஜன் என்பவர் தான் சாட்சியம் அளிக்க அழைத்து வந்தார் என்றால் சரிதான். நான் இந்நீதிமன்றத்திற்கு இதுவரை 2 முறை வந்துள்ளேன். 2ம் பிரதிவாதி நடராஜன் எனக்கு என்ன உறவுமுறை என்றால் எனது அண்ணன் மகனாவார். நான் மயிலாடுதுறை, பட்டமங்கலத்தெருவில் உள்ள ஹசினா காம்பளஸ்சில் கடந்த 10 வருடங்களுக்கு முன்பு வசித்து வந்தேன். அதன்பிறகு சீர்காழி கிராஸ் ரோடு, சேந்தங்குடி என்ற முகவரியில் 10 வருடங்களாக வசித்து வருகிறேன். மேற்படி ஹசினா காம்பளக்ஸ்சில் ஒரு 15 வருடங்களாக வசித்து வந்தேன். நானும், எனது அண்ணனும் ஹசினா காம்பளக்ஸ்சின் உரிமையாளர் மீது வழக்கு தாக்கல் செய்த அந்த வழக்கு தற்போது நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை. எனது அண்ணன் தான் வழக்கினை தாக்கல் செய்திருந்தார்.

அந்த வழக்கில் நான் எனது அண்ணனுக்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் என்ன நடைமுறையில் இருந்ததோ அதைதான் சாட்சியம் அளித்துள்ளேன். நான் சாட்சி கையெழுத்து செய்த பாகசுரவோலையானது 07.10.2002ல்

ஏற்பட்டது. 07.10.2002ல் நான் ஹசினா காம்பளக்ஸில் வசித்து வந்தேன் என்றால் சரியல்ல. நான் கழனிவாசல் கிராமத்தில் வசித்து வந்தேன். 07.10.2002ல் ஏற்பட்ட பாககரவோலை பத்திரம் எனது அண்ணன் ராமதாஸ் என்பவரது குடும்ப உறுப்பினர்களுக்கு இடையே அவர்களது குடும்ப சொத்துக்களைப் பொறுத்து ஏற்பட்டது என்றால் சரிதான். அந்த பாககரவோலை பத்திரத்தில் சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேற்படி ஆவணம் எனது முன்னிலையில் ஏற்படுத்தப்பட்டது தான்.

மேற்படி ஆவணத்தை யார் எழுதினார் என்றால் செம்பனார்கோவிலைச் சேர்ந்த பிச்சையன் மகன் லெட்சுமணன் எழுதினார். மேற்படி ஆவணத்தை லெட்சுமணண் எழுதியதாக ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் எழுதியவர் என்ற இடத்தில் உள்ளது லெட்சுமணன் என்பவரின் கையொப்பம் ஆகும். மேற்படி கரவோலையை 6 நபர்கள் சாட்சி கையொப்பம் செய்தோம். அதில் 3 நபர்கள் தற்போது உயிருடன் இல்லை. கரவோலையில் சாட்சி கையொப்பம் செய்தவர்கள் யார், யார் என்றால் 1.ஏ. மாரிமுத்து, Ex. M.L.A.கட்டாநகரம், 2. நடராஜனின் தாய்மாமன் கலியபெருமாள், கொள்ளிடம், 3. செம்பனார்கோவில் சம்பந்தம் (மூவரும் தற்போது உயிருடன் இல்லை). 4. என். பரமகுரு, 5. புஞ்சை மனோகரன், 6. நரசிங்கநத்தம் செல்வராஜ் ஆகியோர்கள் சாட்சி கையொப்பம் செய்தோம். நாங்கள் 6 பேரும் சாட்சி கையொப்பம் மட்டும் தான் செய்தோம் என்றால் சரிதான். பாககரவேலை பத்திரத்திற்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும், நடராஜன் எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. மேற்படி எனது சாட்சியம் பொய் சாட்சியம் என்றாலும் சரியல்ல.